# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

## பகுதி II

39



1960 களின் இறுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏறக்குறைய 5 இலட் மக்கள் சாதி அடிப்படையில் உரிமை மறுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். இவர்களின் உரிமைகளை மறுத்தவர்களின் தொகை இதைவிடக் குறைவாகவே இருந்தது.

பொதுவாக தொழில் உரிமை, கல்வி உரிமை, நிலம் வாங்கும் உரிமை, ஒன்றுசேரும் உரிமை முதலான அடிப்படை உரிமைகளை தொடர்ந்து மறுத்து வருவதன் மூலம், எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள இந்த மக்களை சிறுபான்மையாகவுள்ள தாம் தொடர்ந்து தங்களது அடிமை குடிமைகளாக வைத்திருக்கலாம் என்று யாழ்ப்பாண மேட்டுக் குடியினர் நினைத்திருந்தனர்.

19-ம் நூற்றாண்டின் இறுதியில் உலகில் பெரும்பாலான நாடுகளிலிருந்த மக்களுக்கு அவர்கள் விரும்பிய தொழிலை தேர்ந்தெடுக்கும், செய்யும் உரிமை வழங்கப்பட்டுவிட்டது.

அனால் 1960 களிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரமேறுபவனின் பிள்ளை மரந்தான் ஏற வேண்டும், துணி தோய்ப்பவனின் பிள்ளை துணிதான் தோய்க்க வேண்டும், முடி வெட்டுபவனின் பிள்ளை முடிதான் வெட்ட வேண்டும் என்ற பிறப்பைக்கொண்டு தொழிலைத் தீர்மானிக்கும் குலத்தொழில் முறை எழுதப்படாத சட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது.

இந்த முறைமையை மாற்ற முயன்ற பலர், கடும் தண்டனையையும் உயிராபத்துக்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

இந்த மக்களின் பிள்ளைகள் கல்வி கற்க அனுமதிக்கப்பட்ட பல பாடசாலைகளில் கல்வி கற்பித்த உயர்சாதி ஆசிரியர்கள், 'மரமேறப்போவதை விட்டு விட்டு ஏன் பள்ளிக் வடம் வந்தீர்கள்?' 'மாடு மேய்க்கப்போவதை விட்டு விட்டு ஏன் பள்ளிக்கூடத்திற்கு வந்தீர்கள்?' என்று அந்தப் பிள்ளைகளுக்கு அடித்த சம்பவங்கள் நிறையவே நடந்திருக்கின்றன. அதாவது மனோவியல் ரீதியாக 'மரமேறுவதும் மாடு மேய்ப்பதும்தான் உங்கள் குலத்தொழில்' என்று அந்தப் பிள்ளைகளுக்கு உணர்த்தும் முயற்சிகள் நடந்தன.

தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடிய தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தங்களுடைய சமூகத்துக்குள் நடந்த இந்த அப்பட்டமான மனித உரிமை மீறலை தட்டிக்கேட்க மட்டுமல்ல, கண்டிக்கக்கூட தயாராக இருக்கவில்லை. பாராளுமன்றப் பதவியிலும், மந்திரிப் பதவியிலும் குறியாக இருந்த அவர்களுக்கு, யாழ்ப்பாண குடாநாட்டு சமூக அமைப்பில் எந்தவித மாறுதல்களும் அவசிமற்ற ஒன்றாகவே இருந்தது. யாழ் சமூக அமைப்பில் வரக்கூடிய மாறுதல்கள் அவர்களுடைய நலன்களையும் ஆட்டங்காண வைத்துவிடும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருந்ததால், மாறுதல் வராமல் தடுக்கின்ற சக்திகளின் பின்னணியில் நின்று செயற்பட்டார்கள். இந்த நிலையில் நா. சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சி, குறிப்பாக அதன் வாலிபர் இயக்கம் யாழ்ப்பாண சாதி அடக்குமுறையை தகர்த்தெறிவதற்கான போராட்டத்தில் இறங்கியது.

1966-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ம் திகதி 'சாதி அமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்கின்ற பதாகையைத் தாங்கி இக் கட்சியின் தலைவர்களும் தொண்டர்களும், சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாண நகரத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். சுன்னாகம் நகரத்தில் வைத்து இவ்வூர்வலத்தில் வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிராந்தியத் தலைவர்கள் சிறீலங்கா பொலிசாரால் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட போதும், ஊர்வலத்தில் சென்றவர்கள் கலைந்து போகாது தொடர்ந்து யாழ் நகரைச் சென்றடைந்தனர்.

# சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்

**1960 களிலேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் மரமேறுபவனின் பிள்ளை மரந்தான் ஏற வேண்டும், துணி தோய்ப்பவனின் பிள்ளை துணிதான் தோய்க்க வேண்டும், முடி வெட்டுபவனின் பிள்ளை முடிதான் வெட்ட வேண்டும் என்ற பிறப்பைக்கொண்டு தொழிலைத் தீர்மானிக்கும் குலத்தொழில் முறை எழுதப்படாத சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.**



யாழ் நகர் முற்றவெளியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய நா.சண்முகதாசன் சாதி அமைப்பைத் தகர்த்தெறிவதற்கான போராட்டத்திற்கு அறைகூவல் விடுத்ததோடு அமெரிக்காவில் வெள்ளை நிற வெறியர்களின் நிற அடக்கு முறையை எதிர்த்து கறுப்பின நீக்கிரோ மக்கள் நடத்தும் உரிமைப் போராட்டத்தைப்போல யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு சாதி வெறியர்களுக்கு எதிராகப் போராட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியினரது இந்த சாதி எதிர்ப்பு போராட்ட அறைகூவல், யாழ் குடாநாட்டின் பட்டி தொட்டி எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சிறீமாவோவின் ஆட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சியினர் நடாத்திய சத்தியாக்கிரகமும், 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டமும் எற்படுத்திய பரபரப்பை விட பத்து மடங்கு பரபரப்பை இந்த அறை கூவல் ஏற்படுத்தியது.

**நா.சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியினரது இந்த சாதி எதிர்ப்பு போராட்ட அறைகூவல், யாழ் குடாநாட்டின் பட்டி தொட்டி எங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சிறீமாவோவின் ஆட்சிக் காலத்தில் தமிழரசுக் கட்சியினர் நடாத்திய சத்தியாக்கிரகமும், 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டமும் எற்படுத்திய பரபரப்பை விட பத்து மடங்கு பரபரப்பை இந்த அறை கூவல் ஏற்படுத்தியது.**

பாட்டன், பூட்டன் முப்பாட்டன் அதற்கும் முற்பட்ட காலத்திலிருந்தே அடக்க அடக்க அடங்கிப்போய், குட்டக் குட்ட குனிந்து போய், ஏமாற்ற ஏமாற்ற ஏமாந்து போய், தோளில் துண்டை எடுத்து கக்கத்தில் வைத்துக்கொண்டு வீதி ஓரம் ஓதுங்கி நின்று கும்பிடு போட்டு வாழ்ந்த மக்களுக்கு, அடித்தால் திருப்பி அடிப்போம் தண்ணீர் தர மறுத்தால் பறித்துக் குடிப்போம்... சாப்பாட்டுக்கடைக்குள் உள்ளே விட மறுத்தால் அந்தக் கடையையே தகர்த்தெறிவோம்... கோயில் கதவுகளை பூட்டி உள்ளே விட மறுத்தால் பூட்டை உடைத்து உள்ளே புகுவோம்...

ஆண்டான் அடிமை என்பது ஆண்டவன் எழுத்தல்ல...

'அடிமை நிமிர்ந்தால் ஆண்டானுக்கு இடமில்லை' என்பது போன்ற புரட்சிக் கருத்துக்கள் மிகப் பெரிய உத்வேகத்தை கொடுத்தன.

குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்த இளைஞர்களிடையே இந்தக் கருத்துக்கள் காட்டுத்தீயைப் போல் பரவின.

யாழ்க்குடாநாட்டின் பட்டி தொட்டி எங்குமிருந்த ஒடுக்கப்பட்டோர் குடியிருப்புக்களிலிருந்த இளைஞர்கள் ஒன்று திரள ஆரம்பித்தனர்.

**அடித்தால்**
**திருப்பி அடிக்க வேண்டும்;**
**உதைத்தால்**
**திருப்பி உதைக்க வேண்டும்.**
**அதற்கு நாமெல்லாம்**
**ஒன்று சேரவேண்டும்**

என்ற உணர்வு அந்த இளைஞர்களிடையே ஏற்பட்டது.

இயல்பாகவே உடல் பலமுள்ள அவர்கள் மனோபலத்தை பெற்றுவிட்டதும், மல்யுத்தம் சிலம்படி, வாள்சண்டை முதலான பாரம்பரிய தற்காப்புக் கலைகளை பயில ஆரம்பித்தனர். பலர் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களை அழைத்து தமது மக்களுக்கு அரசியல் அறிவு ஊட்டுவதிலும் ஈடுபட்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் நிலைமை இவ்வாறு இருந்த போது, அவர்களை ஒடுக்கியவர்கள் தரப்பிலும் இந்தப் போராட்ட அறைகூவல் பெரும் சலசலப்பை ஏற்படுத்திவிட்டது.

'கீழ் சாதிக்காரர்கள் எல்லாம் கிணறுகளில் தண்ணீர் அள்ளப் போகிறார்களாம்?'

'கோயில்களுக்குள்ளே போகக் போகிறார்களாம்?'

'சாப்பாட்டுக் கடைகளிலே வந்த எங்களுக்கு சரிசமமாக வந்து இருந்து சாப்பிடப் போறார்களாம்?'

'ஊர் வழக்கத்தை வந்த வழக்கம் மாத்தப் போகிறதாம்?

'உந்தக் கொம்யூனிஸ்ட்காரரர்களை எல்லாம் அடித்துக் கலைக்க வேண்டும்'

இதுதான் அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாண மேட்டுக் குடி வட்டாரத்தில் பட்டி தொட்டி எங்கும் பரபரப்பாகப் பேசப்பட்ட பேச்சுகளாகும்.

**- நக்கீரன்**

padippakam
www.padippakam.com